*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **22 ஜூன், 2022**

**பத்திரிகை செய்தி**

நாடு முழுவதும் கோவிட் தொற்று மீண்டும் பரவிவரும் சூழலில் புதுச்சேரி கோவிட் மேலாண்மைக் கூட்டம் துணைநிலை ஆளுநர் மாளிகையில் இன்று(22-06-2022) நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

தலைமைச் செயலர் திரு. ராஜுவ் வர்மா, காவல்துறை இயக்குநர் திரு R.S. கிருஷ்ணையா, சுகாதாரத்துறைச் செயலர் திரு உதயகுமார், மாவட்ட ஆட்சியர் திரு வல்லவன், உலக சுகாதார நிறுவனத்தின் புதுச்சேரி பிரதிநிதி திருமதி சாய்ரா பானு, மருத்துவ அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் கோவிட் நிலவரம் குறித்து சுகாதாரத்துறை இயக்குநர் படக்காட்சி மூலம் விளக்கினார். கூட்டத்தில் பின்வரும் ஆலோசனைகளை துணைநிலை ஆளுநர் கூறினார்.

- தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கும் விடுபட்டவர்களுக்கும் விரைவில் தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.
- தடுப்பூசி அதிகமானோருக்கு செலத்தியதால் மட்டுமே புதுச்சேரியில் தொற்று பரவல் கட்டுக்குள் இருக்கிறது என்ற தகவலை பொது மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.
- கோவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றுபவர்களை பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன்மாதிரியை ஏற்படுத்த வேண்டும்.